**இழப்பீடுகளுக்கான அலுவலகம் - 2022**

-----------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புகள் மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிராகரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, அலுவலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அலுவலகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அலுவலகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அலுவலகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கல்வி நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோளாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்கு செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீட்டு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றை கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அலுவலகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அலுவலகத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாக காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அலுவலகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதினை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அலுவலகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக செய்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- அலுவலகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறிப்பிட்ட நியமத்தின் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுநியம இலக்கம் 01 | | |
| 70 ஆம் பந்தியின் பிரகாரம் இன் படி, ஒரு நிறுவனத்தினால் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் | இந்தத் தொகை 2023 ஆம் ஆண்டில் முதிர்ச்சியடைய திட்டமிடப்பட்டுள்ளதால், இது நடைமுறை சொத்தாக | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 70 ஆம் |

| | | |
|---|---|---|
| ஆக நிதி நிலைமைக் கூற்றின் முன்பக்கத்தில் தனித்தனி வகைப்படுத்தல்களாக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தினால் 2023 திசெம்பர் 31 இற்கு முன்னர் முதிர்ச்சியடைகின்ற ஒருங்கிணைந்த மானிய முறைமையின் கீழ் கடன் வழங்கும் நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 222,489,000 ஆன தொகையொன்று நடைமுறையல்லாச் சொத்துக்களாக நிதிக் கூற்றுக்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் விடுபட்டதால், அவ்வாறு செய்ய முடியவில்லை. இருப்பினும், 2023 ஆம் ஆண்டிலிருந்து, அது சரியாகக் கணக்கிடப்படும். | பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 | | |
| (i) நியமத்தின் 49 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்து, பொறி மற்றும் உபகரணப் பொருட்களை மறுமதிப்பீடு செய்யும் போது, சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் வர்க்கம் முழுவதுமாக மீண்டும் கணக்கிடப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தினால் மீளாய்வாண்டில் 03 வகையான சொத்துக்கள் மறுமதிப்பீடு செய்யப்பட்டதுடன் அவற்றில் இரண்டு சொத்து வகைகளான இயந்திரங்கள், பொறி மற்றும் கணனி போன்ற சொத்துக்கள் வர்க்கம் இரண்டில் முழுமையான சொத்து வர்க்கங்களுக்குப் பதிலாக இயந்திரங்கள், பொறிகளுக்குரிய 11 விடயங்கள் மற்றும் கணனிச் சொத்துகளுக்கான 78 விடயங்கள் மட்டுமே மறுமதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. அதன்படி, மறுமதிப்பீட்டுத் திகதியான 2022 திசெம்பர் 31 வரை இந்த சொத்து வகைக்குரிய புத்தகப் பெறுமதி ரூபா 517,523 ஆன இயந்திரங்கள் மற்றும் பொறிகள் தொடர்பான 03 விடயங்கள் மற்றும் ரூபா 4,315,472 மதிப்புள்ள கணினி சொத்துக்கள் தொடர்பான 105 விடயங்கள் மறுமதிப்பீடு செய்யப்படவில.லை. | அவதானிப்பு சரியானது, 2023 ஆம் ஆண்டில், இந்த சொத்து வகையை மறுமதிப்பீடு செய்து இறுதிக் கணக்குகள் மூலம் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) தேசிய கொள்கை, பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வடக்கு | 2023 ஆம் ஆண்டில், இ இறுதிக் கணக்குகள் மூலம் வெளிக்காட்டப்படுவதற்கு | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 |

| | | |
|---|---|---|
| மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் முன்னைய ஆண்டில், நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ஆனால் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படாத. மரத் தளபாடங்கள் தொடர்பான 60 விடயங்கள் மீளாய்வாண்டிலும் ரூபா 350,600 என மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், இந்த நியமத்தின் 86 வது பந்தியின்படி அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும். | இன் 86 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) நியமத்தின் 92(இ)பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களைப் பயன்படுத்துபவர்களுக்கு செயற்பாட்டிலிருந்து ஓய்வு பெற்ற மற்றும் அகற்றுவதற்காக வகைப்படுத்தப்பட்ட சொத்து, பொறி மற்றும் உபகரணங்களின் கொண்டு செல்லும் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளியிடப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பொருட் கணிப்பீட்டின் மூலம் விற்பனைக்கு பரிந்துரைக்கப்பட்ட 50 சொத்து விடயங்கள் தொடர்பான தகவல்கள் வெளிக்காட்டப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டில், சரியான முறையில் ஏலத்தில் விடப்பட்டு தேவையான சீராக்கம் மற்றும் 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மூலம் செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 92(இ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நான்கு இழப்பீடுகளுக்கு செலுத்தப்பட்ட ரூபா 364,300 இழப்பீட்டுத் தொகை கணக்கிடப்படாததால் செலவு ரூபா 364,300 ஆல் குறைவாக மற்றும் காசு மீதி அந்த அளவினனால் அதிகமாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | 2023 பெப்ரவரி மாதம் நாணயம் தொடர்பான சீராக்கங்கள் செய்யப்பட்டு சரி செய்யப்பட்டுள்ளன. இனிமேல் அப்படி விடுபடாமல் இருப்பதற்கு உள்ளக முறைமையொன்று கடைப்பிடிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | செலவுகள் சரியாக கணக்கிடப்பட வேண்டும். |

**1.6 நிதி முகாமைத்துவம்**

**1.6.1 செயற்பாடற்ற வங்கிக் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வர்த்தகத் தொழில் கடனை வசூலிப்பதற்காக இலங்கை வங்கியின் | எதிர்காலத்தில் நடைபெறவுள்ள உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தில் | திறைசேரி செயற்பாட்டு |

| | | |
|---|---|---|
| தப்ரோபன் கிளையில் திறக்கப்பட்ட 2026496 என்ற எண்ணைக் கொண்ட வங்கிக் கணக்கு 2014 திசெம்பர் மாதம் முதல் செயற்படாமல் உள்ளது. கணக்காய்வுத் திகதியான 2023 மே 10 வரை இந்தக் கணக்கில் 2014 திசெம்பர் மாதம் முதல் ரூபா 315,284 மீதியொன்று காணப்பட்டது. இந்த வங்கிக் கணக்கு 2018 யூலை 26 அன்று திறைசேரி செயற்பாட்டு சுற்றறிக்கை 3/2018 இன் படி மூடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தெரிவித்து, இந்த வங்கிக் கணக்குகளை மூடுவதற்கு அங்கீகாரம் பெறுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை 3/2018 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 நடைமுறைக் கணக்கில் வைக்கப்பட்டிருந்த தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒருங்கிணைந்த கடன் மானியத் திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டில் பெறப்பட்டிருந்த ரூபா 114,989,000 ஆன முதலீடுகளில், 2022 ஒக்டோபர் 21 முதல் காணப்படும் ரூபா 20,000,000 ஆன தொகை மற்றும் மூலதனச் செலவுகளுக்காக திறைசேரியிடம் பெறப்பட்ட 2022 மார்ச் 22 முதல் பிடித்து வைக்கப்பட்டிருந்த ரூபா 5,081,456 ஆன தொகை எவ்வித பொருளாதார பலனும் இல்லாமல் கணக்காய்வுத் திகதி இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் வங்கி நடைமுறைக் கணக்கில் தக்கவைக்கப்பட்டுள்ளன. | ஒருங்கிணைந்த கடன் மானியத் திட்டத்தின் கீழ் இந்தத் தொகையைப் பயன்படுத்தி நுண்நிதி நிறுவனமான சமுர்த்தி வங்கியுடன் கடன் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. அதற்காக, திறைசேரியின் பரிந்துரை பெறப்பட்டு உடனடியாக உரிய கடன் முறையை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. அதற்காக உரிய பணிப்பாளர் குழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு நடைமுறைக்கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.<br><br>2021ல் மூலதனச் செலவுக்காக ரூபா 10 மில்லியன் ஒதுக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் இந்த மூலதனச் செலவினத்திற்காக பெறப்பட்ட கட்டுநிதியை செலவிடுவதற்கு பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தாலும், அதில் உள்ள அறைகளை ஒதுக்குவதற்காக பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அலுவலகத்தை வேறொரு வளாகத்திற்கு மாற்றுவது உறுதியாகத் தெரியாததால், இந்த செலவுகளைச் செய்யாமல் எதிர்காலத்தில் நீண்டகால குத்தகை ஒப்பந்தத்தை புதுப்பித்த பிறகு பயன்படுத்தப்படுவதற்கு இந்த மூலதன கட்டுநிதி வைக்கப்பட்டிருந்தது. எனினும் 2023 ஆம் ஆண்டில், அலுவலகம் புதிய இடத்திற்கு மாற்றப்பட்டது. | பொருளாதார பலன் கிடைக்கும் வகையில், நடைமுறைக் கணக்கில் பணத்தை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1. நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 9,946,070 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 17,114,511 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 7,168,441 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு மீண்டெழும் மானியம் அதிகரித்தமை மற்றும் இழப்பீடு செலுத்துவதற்கான ஏனைய செலவினம் குறைவடைந்தமை பிரதான காரணங்களாக காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் இழப்பீடு செலுத்தும் செயன்முறை தொடர்பாக பரீட்சிக்கும் போது வெளிப்படுத்தப்பட்டதன் பிரகாரம் 04 இழப்பீட்டு முன்மொழிவு திட்டங்களின் கீழ் 2002 ஆம் ஆண்டு முதல் நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள ரூபா 653,087,126 பெறுமதியான 4,770 இழப்பீட்டு விண்ணப்பங்கள் தொடர்பாக 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் இழப்பீட்டு தொகையை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திறைசேரியினால் வழங்கப்படுகின்ற ஒதக்கங்கள் மற்றும் கட்டுநிதியைப் பயன்படுத்தி இழப்பீடுகளை வழங்குகிறோம். அதன்படி, 2022ம் ஆண்டு வழங்கப்பட்ட அனைத்து கட்டுநிதியையும் பயன்படுத்தி இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் திறைசேரியிலிருந்து பெறப்பட்ட கட்டுநிதி 4,770 இழப்பீட்டு விண்ணப்பங்களுக்காக காலப் பகுப்பாய்வின் அடிப்படையில் வருடாந்தம் முன்னுரிமை அளிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் சரியாகத் தயாரிக்கப்பட்டு உரிய நேரத்தில் ஒதுக்கீடுகளைப் பெற்று இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டில், இழப்பீட்டுத் தொகைக்கான காசோலைகள் வழங்கப்பட்ட போதிலும், பயனாளிகளுக்கு காசோலைகள் வழங்கப்படுகின்ற சந்தர்ப்பம் வரையிலும் நாளதுவரையாக்கப்படாத தகவல்களின் அடிப்படையில் இழப்பீடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதால், அச்செயல்முறை முறையாக மேற்கொள்ளப்படவில்லை. 2022ஆம் ஆண்டுக்கான இழப்பீட்டுப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட காசோலைகளில், தவறான தகவல்கள் காரணமாக ரூபா 18,056,625 பெறுமதியான 150 காசோலைகள் வங்கியால் மதிப்பிழப்பு செய்யப்பட்டிருந்தன. மேலும் மீளாய்வாண்டில் ரூபா 29,876,935 பெறுமதியான 448 காசோலைகளின் காலம் | இது தொடர்பாக இழப்பீட்டு பயனாளிகளுக்கு வழங்கும் போது, ஒவ்வொரு பயனாளிக்கும் தனித்தனியாக காசோலைகள் இதற்க முன்னர் வழங்கப்பட்டன. அதில் ஏற்படும் சில தவறுகளை விரைவாக கண்டறிந்து, பயனாளிகளுக்கு இழப்பீட்டு தொகையை மிக விரைவாக செலுத்தும் வகையில், தானியங்கி முறையில் பயனாளிகளின் கணக்கில் பணம் செலவு வைக்கப்படுகிறது. எங்கள் அலுவலகம், மாவட்ட அலுவலகங்களின் இணைக்கப்பட்ட அலுவலர்கள் மூலம் இந்த இழப்பீட்டுப் பயனாளிகளின் நாளதுவரையாக்கப்பட்ட தகவல்களைப் பெறுவதற்கான தொடர்ச்சியான முறைமையொன்று யைப் பின்பற்றப்படுகின்றது. | சம்பந்தப்பட்ட பயனாளிகளின் நாளதுவரையாக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இழப்பீடு பரிந்துரைகள் செய்யப்பட வேண்டும். |

நீட்டிக்கப்பட்டதையும் அவதானிக்க முடிந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### 4.1 வருடாந்த அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான வருடாந்த அறிக்கை அந்த ஆண்டைத் தொடர்ந்து வரும் 10 மாதங்கள் முடிவதற்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 ஆம் ஆண்டு தொடர்பான வருடாந்த அறிக்கை 2023 யூலை 07 வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வில்லை. | அச்சிடப்பட்ட பிரதிகள் கிடைத்தவுடன் 2021ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அலுவலகத்தில் 2022 திசெம்பர் 31 இல் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கை 78 ஆக இருந்ததுடன், உண்மையான அதிகாரிகளின் எண்ணிக்கை 54 ஆக இருந்தமையால் 06 பதவிகளுக்கு 24 வெற்றிடங்கள் காணப்பட்டன. | அமப21/1596/304/134 ஆம் இலக்க மற்றும் 2021 செப்டெம்பர் 07 ஆம் திகதிய சுற்றறிக்கையின்படி அதிகாரிகளின் ஆட்சேர்ப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதால் வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியாதிருந்தது. | ஆக்கப்பூர்வமான சேவை மட்டத்தினை பேணிச் செல்வதற்காக காலத்திற்கேற்ற மீளாய்வொன்று மேற்கொண்டு அதன் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |